**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 87/2018</u>**

நாள் 10.11.2025

DW2 – ஜெகதீஸ்வரன்

த/பெ – நஞ்சப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of November 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்னை சாட்சியம் அளிக்க வேண்டி 1–ம் பிரதிவாதியும், அவரது மகன் மூர்த்தியும் அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு பற்றிய விபரம் எனக்கு சுமார் 4 மாதத்திற்கு முன்பு தான் எனக்கு தெரிய வந்தது. 1–ம் பிரதிவாதிக்கு மூர்த்தி மற்றும் கோபால் என்ற இருமகன்கள். என்னிடம் காட்டப்படும் 16.10.2020–ம் தேதியிட்ட பதிவு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் 2–வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் அந்த 16.10.2020–ம் தேதியிட்ட பதிவு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட போது 1–ம் பிரதிவாதி ராமாத்தாள் இந்த வழக்கு பற்றிய விபரத்தை என்னிடம் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆவணங்களில் உள்ள முத்திரைத்தாள்களை யார் வாங்கினார் என்றால் 1–ம் பிரதிவாதி ராமாத்தாள் தான் வாங்கினார். அந்த முத்திரை தாள்களை அவர் வாங்கிய போது நான் உடன் செல்லவில்லை.

2. நான் 11.00 மணி சுமாருக்கு பத்திரம் பத்திர எழுத்தர் கிருஷ்ணன் அலுவலகத்திற்கு போனேன். அப்போது அங்கு 1–ம் பிரதிவாதி ராமாத்தாள் அவர் மகன் மூர்த்தி, அம்மாசை கவுண்டர் மற்றும் சாட்சி மாணிக்கம் ஆகியோர் இருந்தார்கள். அங்கு சுமார் 3 மணி நேரம் இருந்தோம். சொத்து விபரங்களை 1–ம் பிரதிவாதி ராமாத்தாள் தான் ஆவண எழுத்தருக்கு சொன்னார். பத்திர எழுத்தர் அலுவலகத்தில் சுமார் 1 மணி வரை இருந்தோம். பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆவணங்களில் நான் முன்பு கையொப்பம் செய்து வந்தேன், தற்போது வயோதிகத்தின் காரணமாக கையெழுத்து செய்யாமல், எனது இடது பெருவிரல் ரேகை வைத்துள்ளேன் என்று யார் எழுதினார் என்றால் பத்திர எழுத்தர் கிருஷ்ணன் தான் எழுதினார். அந்த ஆவணங்களை எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் அம்மாசை கவுண்டருக்கு அப்போது சுமார் 102 வயதிற்கு மேல் இருந்திருக்கும் என்றால் இருந்திருக்கலாம். அந்த அம்மாசை கவுண்டரை 1–ம் பிரதிவாதியும், அவரது மகன் மூர்த்தியும் தான் அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது 1–ம் பிரதிவாதி ராமாத்தாள் அம்மாசை கவுண்டருக்கு ரூ.9,00,000/–ஐ ரொக்க பணமாக கொடுத்தார்.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது பக்கத்து தோட்டத்தில் 1–ம் பிரதிவாதி ராமாத்தாள், அவரது தந்தை அம்மாசை கவுண்டர் ஆகியோர் வசித்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால், அவர்கள் ஒரே குடும்பமாக தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் ஒரே குடும்பமாக வசித்து வந்துள்ள நிலையில் நான் சொல்வது போல ரூ.9,00,000/–ஐ 1–ம் பிரதிவாதி கொடுத்ததும் கிடையாது, அதை அம்மாசை கவுண்டர் பெற்றுக்கொண்டதும் கிடையாது என்றால் சரியல்ல. ராமாத்தாள் விவசாயம் தான் செய்து வந்தார். அம்மாசை கவுண்டரும் விவசாயம் தான்

செய்து வந்தார். அவருக்கு வயது அதிகமானதால் ராமாத்தாளுடன் வசித்து வந்தார். அம்மாசை கவுண்டரின் மற்ற வாரிசுகளுக்கு சொத்துக்கள் பொறுத்து என்ன ஏற்பாடுகள் செய்துள்ளார் என்ற விபரம் எதுவும் பி.வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1–ம் பிரதிவாதி ராமாத்தாளும் எழுதி வாங்குபவர் என்ற இடத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அதனால், பி.வா.சா.ஆ.8 ஏற்பட்ட தேதியில் ராமாத்தாளும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்திற்குரிய பதிவு கட்டணத்தை ராமாத்தாள் தான் கட்டினார். என்னென்ன சொத்துக்களை எழுதி வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது, சாட்சி கையொப்பம் மட்டும் தான் செய்தேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அம்மாசை கவுண்டர் எத்தனை கைரேகைகள் வைத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள விபரங்களை அம்மாசை கவுண்டருக்கு நான் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான், பத்திர எழுத்தர் தான் படித்து காண்பித்தார். அதேபோல் பி.வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தில் அம்மாசை கவுண்டர் எத்தனை கைரேகை வைத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 17.12.2012–ம் தேதியில் பத்திர அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை சுமார் 11.00 மணிக்கு சென்றேன். நான் சொல்வது போல எந்தவொரு தொகையும் அம்மாசை கவுண்டர் 1–ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆவணங்கள் ஏற்பட்ட விபரமே அம்மாசை கவுண்டருக்கு தெரியாது என்றும், 1–ம் பிரதிவாதி

ராமாத்தாளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.10 15:01:08 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**